2003 மார்ச் 26]

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 82, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

82—

அரசினர் தோட்டம்

***24026—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்திலுள்ள குப்பைக் கூளங்களை அகற்றி, பாதுகாப்பான சுற்றுச்சுவர் அமைத்து தோட்டங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்கியிருக்கக்கூடிய வளாகம் அமைந்திருக்கக்கூடிய ஓமந்தூரார் அரசினர் தோட்டம் என்பது, தோட்டம் என்கிற நிலையிலிருந்து இப்போது மாறுபட்டு, ஆங்காங்கே நிறைய குப்பைக் கூளங்கள் சேர்ந்த ஓர் இடமாக, பெட்டிக் கடைகள் எல்லாம் நிறைந்த ஓர் இடமாக உள்ளது. பொதுவாக மாநகரத்தில் இருக்கக்கூடிய கால்நடைகள் எல்லாம் உள்ளே வந்துவிடுகின்றன. சில நேரங்களிலே, வெளிப்படையாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், திறந்தவெளிக் கழிப்பிடமாகப் பல பகுதிகள் பயன்படுத்தப்பட்டு வருவதை மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் கவனத்தில் கொண்டு உங்களுடைய துறையின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய அரசினர் தோட்டத்தை நீங்கள் சுத்தப்படுத்தி, உள்ளே யாரும் வராமல் இருக்க அடையாள அட்டைகளை எல்லாம் கொடுக்கவேண்டும். ரோடுகளே இல்லை. பொதுவாக சட்டமன்ற புதிய குடியிருப்பு வளாகத்திற்கு எதிரில் மட்டும்தான் சிமெண்ட் ரோடு இருக்கிறது; மற்றப் பகுதிகளிலே....(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவற்றை எல்லாம் மானியக் கோரிக்கையிலே பேசுங்கள். கேள்வி என்னவென்று கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் பொருந்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோருக்கும் பொருந்தினதுதான்.

திரு. சி. ஞானசேகரன்: ஆகவே அந்த இடத்திலே கெஸ்ட் ஹவுசுக்குப் போகக்கூடிய பாதையும் இல்லை. சர்வீஸ் கமிஷன் ரோடையொட்டி இப்போது சுற்றுலா அலுவலகம் இருக்கக்கூடிய பகுதிக்கும் பாதை இல்லை. அதேபோல அண்ணா சிலைக்குப் போகக்கூடிய பாதையும் இல்லை. எல்லா ரோடுகளும் ரோடுகளாக இல்லாமல் தண்ணீர் தேங்கக்கூடிய இடமாக இருக்கிறது. இப்போது பெரிய பெரிய தனியார் கம்பெனிகள் இருக்கின்றன. அவர்களிடம் நீங்கள் ஸ்பான்சர் செய்யச் சொல்லி கேட்டாலும்கூட அவர்களே தோட்டத்தை உள்ளே அமைத்து பாதுகாத்துக் கொள்வார்கள். அந்த வகையிலே அரசிடம் நிதி இல்லையென்று சொன்னால் நீங்கள் சில நிறுவனங்களை அணுகியாவது அதைச் சுத்தமாக வைத்துக்கொள்ள, அந்த இடத்தில் பூங்காக்களை உருவாக்குவதற்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் விளையாடுவதற்கு விளையாட்டு மைதானங்கள் போன்றவற்றை எல்லாம் உருவாக்கிக் கொடுப்பதற்கும் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகம் சுமார் 75 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். இவ்வளாகத்தில் புதிய சட்டமன்ற உறுப்பினர் விடுதி, பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதி மற்றும் சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ராஜாஜி மண்டபம், கூவம் இல்லம், தமிழரசு அச்சகம் மற்றும் அலுவலகங்கள், பாலர் பவன்

2003 மார்ச் 26]

இயங்கும் காந்தி இல்லம், அனைத்திந்திய மகளிர் சங்கத்தினரால் நடத்தப்படும் மேல்நிலைப் பள்ளி, இரண்டு உணவகங்கள், காவல் துறையினரின் மத்திய புலனாய்வுத் தலைமை அலுவலகம் மற்றும் சுமார் 204 அரசு ஊழியர் குடியிருப்புகள் ஆகியவை அமைந்துள்ளன. இவ்வளாகத்தையொட்டி, கலைவாணர் அரங்கம் மற்றும் அரசினர் விருந்தினர் இல்லம் போன்ற பல்வேறு துறையினரின் கட்டடங்கள் உள்ளன. மேற்குறிப்பிட்ட பல்வேறு துறைகள் சம்பந்தப்பட்ட கட்டடங்களைப் பராமரிக்க அந்தந்தத் துறைகளின் வேண்டுகோளின்படி கட்டடம் பராமரிக்கத் தேவையான நிதியை அந்தந்தத் துறை மூலம் பெற்று பொதுப் பணித் துறை பராமரித்து வருகிறது. இவ்வளாகத்தில் கட்டடங்கள் போக திறந்தவெளிப் பரப்பளவு சுமார் 70 ஏக்கர் ஆகும். எனவே அதிகப் பரப்பளவு கொண்ட திறந்தவெளியில் செடிகள் மற்றும் முட்புதர்கள் எளிதில் வளர்ந்துவிடுகின்றன. சென்ற ஆண்டு ஜூலை மாதத்தில் பொதுப் பணித் துறை என்ற தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து இவ்வளாகம் முழுவதும் இருந்த குப்பைகள், செடிகள் மற்றும் முட்புதர்கள் முழுவதுமாக அகற்றப்பட்டு, மேடு பள்ளங்கள் ஜெ.சி.பி. மூலம் சமன்படுத்தப்பட்டன. அதிக திறந்தவெளிப் பரப்பளவு கொண்ட இவ்வளாகத்திலிருந்து குப்பைக் கூளங்களை அவ்வப்போது அகற்றி செடி மற்றும் முட்புதர்கள் வளர விடாமல் தொடர்ந்து பாதுகாத்து, ஆங்காங்கே உடைந்துள்ள சுற்றுச் சுவர்களைப் பழுதுபார்த்து, இவ்வளாகத்தில் அமைந்துள்ள மூன்று பிரதான வாயில்களிலும் இரும்புக் கதவு அமைத்து திறந்தவெளிகளில் தோட்டம் மற்றும் புல்தரைகள் அமைத்து, சாலைகள் முழுவதையும் செப்பனிட, தோராயமாக ரூ. 50 இலட்சம் தேவைப்படுகிறது. மேலும் மூன்று பிரதான வாயில்களில் இரும்புக் கதவு அமைத்து, அங்கே காவலாளர்களையும் போடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளைச் செய்து முடிக்க வருமாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பல விளக்கங்களை அளித்திருக்கிறார்கள். இதிலே நான்கு பிரதான வாயில்களும் இப்போது இருக்கின்றன. அதற்கான Gate-கள் எல்லாம் இருந்தும்கூட காவலர்கள் அங்கே யாரும் இல்லை. இரண்டு மாதங்களுக்கு முன்னால் இரண்டு காவலர்களைப் போட்டார்கள். இன்று காலை பார்த்தால் இல்லை. பொதுவாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை

நாங்கள் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம் உள்ளே வரக்கூடியவர்களைத் தடுத்து நிறுத்தி அனுமதிச் சீட்டு இருக்கிறவர்களை மட்டுமே உள்ளே அனுமதிக்கக்கூடிய ஒரு வழிவகையைச் செய்ய வேண்டும். அதை ஒரு திறந்தவெளிக் கழிப்பிடமாக, மாடுகள் எல்லாம் கட்டி வைக்கக்கூடிய மாட்டுப் பண்ணையைப் போல வைத்துக் கொண்டிருக்கக்கூடிய நிலையை உடனடியாக மாற்ற வேண்டும். இதைச் செய்வதற்கு நிதி தேவையில்லை. பொதுவாக உங்களிடம் இருக்கக்கூடிய குறைந்த பணியாளர்களை வைத்தே இதைச் சுத்தமாக வைத்துக் கொள்ளமுடியும். ஆகவே அமைச்சர் அவர்கள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அமையவிருக்கிற பிரதான வாயில்களில் காவலாளர்களை நியமித்துப் பல்வேறு துறைகளில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய அரசினுடைய பல்வேறு அதிகாரிகளையும் அழைத்து, அவர்கள் Identity Card மூலம் பரிசோதனை செய்வதற்கு தக்க ஆலோசனை செய்து முழுமையாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 83, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு நிதி அமைச்சர்.

83—

சம்பள விகிதம்

•15038—திரு. ஜி.கே. மணி:

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைத் துறையில் பணியாற்றும் மருத்துவர்களுக்கும் ஆங்கில பொது மருத்துவர்களுக்கு ஈடான சம்பளம் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?